ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 10.5 – பூங்கோதை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 10.5 – பூங்கோதை

‡ பூங்கோதை ஆய்ச்சி ⋆
கடை வெண்ணை புக்குண்ண ⋆
ஆங்கவள் ஆர்த்துப் புடைக்கப் ⋆
புடை உண்டு ⋆
ஏங்கி இருந்து ⋆
சிணுங்கி விளையாடும் ⋆
ஓங்கோத வண்ணனே ! சப்பாணி ⋆
ஒளி மணி வண்ணனே ! சப்பாணி ॥ **10.5.1** ॥

தாயர் மனங்கள் தடிப்பத் ⋆
தயிர் நெய் உண்டேய் எம் பிராக்கள் ⋆
இரு நிலத்தெங்கள் தம் ⋆
ஆயர் அழக அடிகள் ⋆
அரவிந்த வாயவனே ! கொட்டாய் சப்பாணி ! ⋆
மால் வண்ணனே ! கொட்டாய் சப்பாணி ॥ **10.5.2** ॥

தாம் ஓர் உருட்டித் ⋆
தயிர் நெய் விழுங்கிட்டு ⋆
தாமோ தவழ்வர் என்று ⋆
ஆய்ச்சியர் தாம்பினால் ⋆
தாமோதரக் கையால் ⋆
ஆர்க்கத் தழும் பிருந்த ⋆

தாமோதரா ! கொட்டாய் சப்பாணி ! ⋆
தாமரைக் கண்ணனே ! சப்பாணி ॥ **10.5.3** ॥

பெற்றார் தளை கழலப் ⋆
பேர்ந்தங்கயல் இடத்து ⋆
உற்றார் ஒருவரும் இன்றி ⋆
உலகினில் ⋆
மற்றாரும் அஞ்சப் போய் ⋆
வஞ்சப் பெண் நஞ்சுண்ட ⋆
கற்றாயனே ! கொட்டாய் சப்பாணி ! ⋆
கார் வண்ணனே ! கொட்டாய் சப்பாணி ॥ **10.5.4** ॥

சோத்தென நின்னைத் ⋆
தொழுவன் வரம் தர ⋆
பேய்ச்சி முலை உண்ட பிள்ளாய் ⋆
பெரியன ஆய்ச்சியர் ⋆
அப்பம் தருவர் ⋆
அவர்க்காகச் சாற்றி ஓர் ஆயிரம் சப்பாணி ! ⋆
தடங்கைகளால் கொட்டாய் சப்பாணி ॥ **10.5.5** ॥

கேவலம் அன்று ⋆
உன் வயிறு வயிற்றுக்கு ⋆
நான் அவல் அப்பம் தருவன் ⋆
கருவிளைப் பூவலர் நீள் முடி ⋆
நந்தன் தன் போர் ஏறே ⋆
கோவலனே ! கொட்டாய் சப்பாணி ! ⋆
குடம் ஆடீ கொட்டாய் சப்பாணி ॥ **10.5.6** ॥

புள்ளினை வாய் பிளந்து ⋆
பூங்குருந்தம் சாய்த்து ⋆
துள்ளி விளையாடித் ⋆
தூங்குறி வெண்ணெயை ⋆
அள்ளிய கையால் ⋆
அடியேன் முலை நெருடும் ⋆
பிள்ளைப் பிரான் ! கொட்டாய் சப்பாணி ! ⋆
பேய் முலை உண்டானே ! சப்பாணி ‖ **10.5.7** ‖

யாயும் பிறரும் ⋆
அறியாத யாமத்து ⋆
மாய வலவைப் ⋆
பெண் வந்து முலை தர ⋆
பேய் என்றவளைப் ⋆
பிடித்துயிரை உண்ட ⋆
வாயவனே ! கொட்டாய் சப்பாணி ! ⋆
மால் வண்ணனே ! கொட்டாய் சப்பாணி ‖ **10.5.8** ‖

கள்ளக் குழவி ஆய்க் ⋆
காலால் சகடத்தை ⋆
தள்ளி உதைத்திட்டுத் ⋆
தாய் ஆய் வருவாளை ⋆
மெள்ளத் தொடர்ந்து ⋆
பிடித்தார் உயிர் உண்ட ⋆
வள்ளலே ! கொட்டாய் சப்பாணி ! ⋆
மால் வண்ணனே ! கொட்டாய் சப்பாணி ‖ **10.5.9** ‖

‡ கார் ஆர் புயற்கைக் ⋆
கலிகன்றி மங்கையர் கோன் ⋆
பேராளன் நெஞ்சில் ⋆
பிரியாதிடம் கொண்ட சீராளா ⋆
செந்தாமரைக் கண்ணா ! ⋆
தண் துழாய்த் ⋆
தாராளா கொட்டாய் சப்பாணி ! ⋆
தட மார்வா கொட்டாய் சப்பாணி ‖ **10.5.10** ‖

அடிவரவு — பூங்கோதை தாயர் தாமோர் பெற்றார் சோத்தென கேவலம்
புள்ளினை யாயும் கள்ளம் காரார் எங்கானும்

பூங்கோதை முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்